17.03.2026



**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், துறையூர்.**

**அசல் வழக்கு எண்.250/2010**

**வா.சா. 1–கதிர்வேல்,த/பெ.விஜயசுந்தரம்**

**சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது**

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் இளம்பொறியியல் பட்டப்படிப்பு படித்துள்ளேன். 24.10.1990 என்பது நான் பிறந்த தேதி. எனக்கு 36 வயது. நீதிமன்ற வழக்கறிஞர் ஆணையருடன் அரசாங்க அளவர் தாவா சொத்தை பார்வையிட்டு அளவீடு செய்யும்போது நான் உடனிருந்தேன். தாவா சொத்து உட்பட எனது தகப்பனார் 1999 ஆம் ஆண்டு கிரையம் வாங்கினார் என்று சொன்னால் சரிதான். கிரையம் வாங்கும்போது எனக்கு 9 வயது என்பதால் அந்த கிரையத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்று சொன்னால் சரிதான். எனது தகப்பனார் காலி மனையுடன் கூடிய ஓட்டு வில்லை வீட்டைத்தான் கிரையம் வாங்கினார். எனவே எனது தகப்பனார் வாங்கிய கிரைய நிலத்தில் ஓட்டு வில்லை வீடு இருந்ததாக தான் சொல்கிறேன். கிரையம் பெற்ற பிறகு எனது தகப்பனார் ஓட்டு வில்லை வீட்டினை அப்புறப்படுத்திய பிறகு புதியதாக வீட்டை வாங்கினார். நான் தாக்கல் செய்த முதன்மை நிரூபண

17.03.2026



வாக்குமூலத்திலும் எனது தகப்பனார் காலி மனையுடன் கூடிய ஓட்டு வில்லை வீட்டை கிரையம் வாங்கினார் என்று தான் குறிப்பிட்டு சொல்லியுள்ளேன். எனது தகப்பனார் கிரையம் வாங்கும் போது ஓட்டு வில்லை வீட்டின் அளவு என்ன காலி மனையின் அளவு என்ன என்று எனக்கு தெரியாது. தாவா தென்வடல் பாதை 5 அடி அகலம் உள்ள பாதைக்கு வடபுறம் உள்ள ஓட்டு வில்லை வீட்டை தான் கிரையம் வாங்கினார் என்று சொன்னால் சரிதான். ஓட்டுவில்லை வீட்டிற்கு வடக்கில் உள்ள எந்த நிலத்தையும் எனது தகப்பனார் கிரையம் பெறவில்லை. எனது தகப்பனார் கிரையம் பெற்ற ஓட்டுவில்லை வீடு வடக்கே பாப்பாத்தி வீடு வரை செல்கிறது என்றால் சரிதான். எனது தகப்பனார் கிரையம் வாங்கிய கிரைய ஆவணத்தை நான் படித்து பார்த்துள்ளேன். வா.சா.ஆ.2 கிரைய ஆவணத்தை நான் எனது தகப்பனார் வாங்கிய ஓட்டுவில்லை வீடு பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.2 கிரைய ஆவணத்தில் எனது தகப்பனார் வாங்கியதாக சொல்லப்படும் ஓட்டுவில்லை வீட்டைப்பற்றி குறிப்பு இல்லை என வா.சா.ஆ.2 ஆவணம் சாட்சியிடம் படித்து பார்க்க கொடுக்கப்பட்டது சாட்சி மிகவும் கவனமாகவும் பொறுமையாகவும் படித்து பார்த்துவிட்டு ஓட்டுவில்லை வீடு எழுதப்படவில்லை என பதில் அளிக்கிறார். வா.சா.ஆ.2 கிரைய ஆவணத்தில் 715 சதுரடியும் காலி மனையாகதான்

காட்டப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். எனது தகப்பனார் ஓட்டுவில்லை வீட்டை கிரையம் வாங்கும்போது அந்த கிரைய ஆவணமான வா.சா.ஆ.2 ஆவணத்தில் காலி மனை என குறிப்பிட்டு வாங்கியதால் வா.சா.ஆ.2 ஆவணம் உண்மையான சங்கதியின் அடிப்படையில் எழுதப்பட்ட ஆவணம் இல்லை என்று சொன்னால் சரிதான். நான் தாக்கல் செய்த முதன்மை நிரூபண வாக்குமூலத்திலும் பத்தி 4 ல் அவ்வாறு ஓட்டுவில்லை வீட்டிற்கான கிரைய ஆவணம் தான் வா.சா.ஆ.2 ஆவணம் என குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான், அந்த கிரைய ஆவணத்தில் காலி மனை என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஓட்டுவில்லை வீட்டை கிரையம் வாங்கும்போது கிரைய ஆவணத்தில் காலி மனை என குறிப்பிட்டுள்ளதால் பத்தி 4 ல் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகள் உண்மைக்கு மாறானவை என்று சொன்னால் சரிதான். தியாகி குமரன் தெரு என்பது தென்வடல் வீதி என்று சொன்னால் சரிதான். இந்த தியாகி குமரன் தெருவில் இருந்து தென்வடல் 5 அடி சந்து தொடங்குகிறது என்று சொன்னால் சரிதான். தியாகி குமரன் தெருவில் இருந்து துவங்குகிற தென்வடல் 5 அடி சந்தில் இருபுறமும் குடியிருப்பு வீடுகள் உள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்கு முகமாக செல்கின்ற இந்த 5 அடி சந்தில் வடபுறத்தில் முதல் மனை காலியாக தான்

17.03.2026



உள்ளது என்று சொன்னால் சரிதான். இந்த காலி மனை தொப்புளானுக்கு உரியது என்றால் சரிதான், இந்த தொப்புளானின் காலி மனைக்கு அடுத்தாற்போல் ரவி பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட மனையாகும். இந்த பிரதிவாதி ரவி மனைக்கு அடுத்தாற்போல் உள்ள மனை டீக்கடை குமாருக்கு பாத்தியப்பட்டதாகும். குமார் மனைக்கு அடுத்தாற்போல் மேல்புறம் உள்ள மனை பிரதிவாதி ரவி மனையாகும். இந்த வழக்கிற்கு சம்பந்தப்பட்ட தாவா சொத்து தியாகி குமரன் தெருவில் மேல்புறத்தில் வடக்கு பக்கத்தில் 4 வது மனை என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.1 மாதிரி வரைபடத்தில் எனது தகப்பனார் 3 வது மனையாக காட்டியுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. இரண்டாவது மனையதான் தற்போது கிரையம் பெற்றுள்ளார். 1 வது காலி மனைக்கு உரிமையாளிடமிருந்து தான் பிரதிவாதி ரவி தற்போது 3 வது மனையை கிரையம் பெற்றுள்ளார். அவ்வாறு பிரதிவாதி ரவி 3 வது மனையை கிரையம் பெற்ற கிரைய ஆவணத்தை நான் பார்த்துள்ளேன். வா.சா.ஆ.1 எனது தகப்பனார் தாக்கல் செய்த மாதிரி வரைபடத்தில் பிரதிவாதி மனை 3 வது தாவா காட்டப்பட்டுள்ளதால் தற்போது அதை நான் அனுசரித்து தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 5 அடி பாதைக்கு தெற்கு திசையில் அமைந்துள்ள 1 வது மனை கிண்ணிக்கு

பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரிதான். அதற்கு அடுத்த மனை செல்விக்கு பாத்தியப்பட்டது. அதற்கு அடுத்தாற்போல் அமைந்துள்ள 3 வது மனை பிரதிவாதி ரவிக்கு பாத்தியப்பட்டது. அதற்கு அடுத்ததாற்போல் உள்ள 4 வது மனை உமாவிற்கு பாத்தியப்ப்பட்டது. இந்த உமாவின் மனை என் வீட்டிற்கு நேர் தெற்கு திசையில் அமைந்துள்ளதா என்றால் இல்லை. இந்த 5 அடி பாதை எங்கள் விட்டின் மேல்புற அத்தோடு முடிந்துவிட்டது என்றால் சரிதான். 5 அடி பாதைக்கு அடுத்தாற்போல் தான் உமா மனை உள்ளது என்றால் சரியல்ல, உமாவின் வீடு எங்கள் வீட்டிற்கு எதிர்த்தாற்போல் இல்லை எங்கள் வீட்டிற்கு மேற்கு பக்கம் தள்ளி உள்ளது. வா.சா.ஆ.1 மாதிரி வரைபடத்தில் எங்கள் வீட்டின் மேற்கு புற அத்தும் உமாவீட்டின் அத்தும் ஒரே நேர்கோட்டில் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது தவறு. 2007 ம் ஆண்டு எனது தகப்பனார் ஓட்டுவில்லை வீட்டை இடித்துவிட்டு புதியதாக வீடு கட்டினார். பிரதிவாதி வீட்டிற்கும் என் வீட்டிற்கும் இடையில் தென்வடல் திசையில் கூரை வாரி சந்து உள்ளதா என்றால் உள்ளது. பிரதிவாதி வீட்டின் தெற்கு பக்கம் மச்சிவீடாகவும் வடக்கு பக்கம் ஓட்டுவில்லை வீடும் உள்ளது என்றால் சரிதான். வடக்கு பக்கம் உள்ள பிரதிவாதி வீட்டின் ஓட்டுவில்லை வீட்டின் ஓடு கூரை வாரி சந்தில் நீட்டிக்கொண்டு உள்ளது என்றால் சரிதான் இதை தான் எனது

17.03.2026



தகப்பனார் வா.சா.ஆ.1 ஆவணத்தில் கோடிட்டு காட்டியுள்ளார் என்றால் சரிதான். ஓட்டுவில்லை வீட்டின் நீட்டிக்கொண்டிருக்கும் அளவு வரை மச்சி வீட்டின் கட்டையை அமைத்து கட்டியுள்ளார் என்று சொன்னால் சரிதான். அவ்வாறு எனது தகப்பனார் கட்டை என்று சொல்லக்கூடிய இடம் பிரதிவாதியின் கூரை இடத்தில் தான் உள்ளது என்றால் சரிதான். எங்கள் வீட்டிற்கு கிழக்கு திசை பார்த்த வாசல்படி உள்ளது. ஆனால் வா.சா.ஆ.1 மாதிரி வரைபடத்தில் தெற்கு திசையை நோக்கி உள்ள வாசல்படியை அமைந்துள்ளதாக தான் எங்கள் வீட்டைக் காண்பித்துள்ளார் என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.1 மாதிரி வரைபட படி 5 அடி அகலமுள்ள பாதையிலிருந்து உண்டான வீட்டிற்கான வாசல்படி கிழக்கு திசையை பார்த்து உள்ளது என்றால் சரிதான், எனவே வா.சா.ஆ 1 மாதிரி வரைபடம் தவறு என்று சொன்னால் சரிதான்.

/உண்மை நகல்/
ஒம்/–திரு.தி. அன்பு,
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
துறையூர்.